


MOGAPPAIR
# BUSINESS TIMES




Jul.14 - 20, 2024 Vol.1 Issue 50 Circulated at Ayappakkam, Ayanambakkam, Vanagaram and Thiruverkaadu English & Tamil 4 Pages










## ஆன்லைன் ஜாப்..! ஆசை காட்டி மோசடி

“ஒரு நாளில் வெறும் மூன்று மணி நேரம் மட்டுமே வேலை. மாதம் ரூ.35,000 சம்பாதிக்கும் வாய்ப்பு என்று வாசுவுக்கு ஒரு எஸ்.எம்.எஸ் வந்தது. வேலை தேடிக் கொண்டிருந்த அவர், 'அடடே, அருமையான வாய்ப்பாக இருக்கிறதே!' என்று பதில் அளிக்க ஆரம்பித்தார். வாசு எப்படி லூசு ஆனார் என்பதைப் பார்ப்போம்.

"முதலில் ஆறேழு வீடியோக்களையும், விளம்பரங்களையும் அனுப்பி அவற்றுக்கு லைக் போடச் சொல்கிறார்கள். வந்த வேகத்தில் லைக் போட்டு டாஸ்க்கை நிறைவேற்ற, 2 நாளில் அவரது கணக்குக்கு ரூ.1600 வந்து சேர்ந்தது. அடுத்த லெவல் என்று சொல்லி மேலும் பல சின்னச் சின்ன விஷயங்களைத் தருகிறார்கள். ரூ.4500 வங்கிக் கணக்கில் கிரெடிட் ஆகிறது.

அடுத்து நீங்கள் உயர் லெவலுக்கு வந்து விட்டீர்கள். இதில் உங்களுக்கு மாதம் ரூ.12000 கிடைக்கும். அதற்கு நீங்கள் ரூ.5000 கட்ட வேண்டும் என்கின்றனர். நம்பிக் கட்டுகிறார். ரூ.12000 வருகிறது. இப்படியே லெவல் ஏற்றி ஏற்றி ரூ.1.50 லட்சம் கட்டினால், மாதா மாதம் பெரும் தொகை கிடைக்கும் என்கிறார். அவரது கிரெடிட் கணக்கில் பணம் சேர்ந்து கொண்டே போகிறது. இதை ரூ.10 லட்சம் வரும்வரை எடுக்க வேண்டாம் என்று நிபந்தனை வருகிறது.

இதற்கிடையே தனது புத்திசாலித்தனத்தை



உற்றார், உறவினர், நண்பர்களிடம் பகிர்ந்து கொண்டு அவர்களையும் இதில் இணைத்து விடுகிறார். ஒரு கட்டத்தில் கிரெடிட்டில் உள்ள பணத்தை எடுக்க முடியாத நிலை ஏற்படும்போதுதான் தாங்கள் இதில் சிக்கிக் கொண்டதை அவர்கள் உணர்கிறார்கள்.

இதுபோன்ற ஒரு வழக்கில் வங்கி எண்ணைத் தேடி பெங்களூருக்குச் சென்றால், இரு கூலித் தொழிலாளர்கள் பரிதாபமாக நிற்கின்றனர். வங்கிக் கணக்கின்படி லட்சாதிபதிகள் அவர்கள். ஆனால், டீக்கு காசு கேட்டு நிற்கின்றனர்...'' என்கிறார், அண்ணா நகர் சைபர் குற்றப் பிரிவு உதவி ஆய்வாளர் கோபிநாத். மேலும், இதுபோன்ற குற்றச் செயல்களில் இருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ளும் வழிகளைப் பகிர்ந்து கொண்டார்.




"எந்த வேலையிலும் எளிதில் பணம் வராது. இந்த வகை தகவல்கள் போலி என்று உணருங்கள். விட்டில் பூச்சி, தூண்டில் மீன்கள் வகையறா ஏமாற்று இது. இது நான்கைந்து கட்டங்களாக ஆட்கள் இருக்கிறார்கள். காசுக்கு எங்கும் அப்பாவிகளிடம் தகவல் பெற்று அதை வைத்து அவர்கள் பெயரில் ஏகப்பட்ட வங்கிக் கணக்கைத் துவங்கி விடுகின்றனர். அதன் மூலம் பெறப்படும் பணம் உடனுக்குடன் வேறு கணக்குகளுக்கு மாற்றப்பட்டு வெளிநாடுகளுக்குச் சென்று விடுகிறது. ஆள் பிடிக்க ஒரு டீம், பணத்தைக் கையாள ஒரு டீம், விதவிதமான டாஸ்க்குள் தந்து நம்ப வைக்க ஒரு டீம் என்று கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு நிகராக பல நூறு பேர் இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

எனவே, 'காசு தருகிறேன், வங்கிக் கணக்கு ஆரம்பிக்க விவரம் தா!' என்றால் கொடுக்கக் கூடாது. போலி எஸ்.எம்.எஸ்கள் குறித்து சைபர் க்ரைம் போலீஸில் புகார் செய்யுங்கள். நம்ப வைத்து ஏமாற்றும் இந்தக் கும்பலை ஒழிக்க அந்த நம்பரை பிளாக் செய்து தப்பியுங்கள்!' என்று ஆலோசனை சொன்னார் கோபிநாத்.

# CLASSIFIDES

விளம்பரங்களை 98409 96745 என்னுக்கு வாட்ஸ் அப் மூலம் அனுப்பி வைக்கவும்

## RENT

**MEL AYANAMPAKKAM**
OPP. VELAMMAL VIDYALAYA
NEW INDIVIDUAL HOUSE
2 BHK
RENT Rs.15,000
97890 09325
96551 59241

## COM.RENT

COMMERCIAL SPACE
1325 SQ.FT
SPACE AVAILABLE FOR RENT
NEAR AYAPPAKKAM PARK ADJACENT ROAD TO MUTHU MAARIYAMMAN KOVIL
97912 82827
93617 28925

## SALE

ஆவடியில்
35 லட்சத்தில் ஓர் அழகிய தனி வீடு
CMDA
20
70107 02290

1 MINUTE DRIVE TO MOGAPPAIR...
HALF A PRICE OF MOGAPPAIR...
GATED COMMUNITY AWAITED FOR YOU!
JUST Rs.6,190
IN PRIME LOCATION.
NEAR VELAMMAL SCHOOLS
78458 36745

FLATS FOR SALE
MOGAPPAIR WEST EXT
NEAR VELAMMAL CBSE SCHOOL
3BHK
6199 Per Sq.ft
READY TO OCCUPY
GREATER CHENNAI CORPORATION LIMIT
9384057995

## SALE

FLATS FOR SALE
ATHIPET
Opp. Velammal CBSE School
2BHK
57 LAKHS*
GREATER CHENNAI CORPORATION LIMIT
89256 22287

## WANTED

வாவின், முகப்பேர்
பெட்ரோல் பங்கிற்கு பம்ப் ஆப்ரேட்டர் ஆண் / பெண்கள் தேவை.
AGE : BELOW 35
நல்ல சம்பளம் + Bata. அணுகவும்:
94441 25758
73583 90696

WANTED
FEMALE FIELD EXECUTIVES
FOR ADVT CANVASING
WORK AROUND MOGAPPAIR
TIMING : 10 AM - 6 PM.
SALARY + INCENTIVE
95000 98525

அம்மன் மோட்டார்ஸ்
ஆண்கள் / பெண்கள்
வயது 20 to 40 வரை
SALARY : Rs.15K - 30K
Part / Full time
4 Nos
9940543254 / 7904016161

## WANTED

WANTED
•DUTY NURSE
•LAB TECHNICIAN
FOR A CLINIC AT VANAGARAM
TIME : 7 AM - 1 PM
SALARY: Rs. 7000
97908 70338

APEX MOTORZ
MULTI BRAND CAR SERVICE
WANTED
CAR MECHANIC & HELPER FOR MULTIBRAND CAR SERVICE
73586 59165

BOYS WANTED
FOR PAPER SUPPLY ON SUN. MORNING
93446 37517
94443 88563

## TUITION

NEW ADMISSIONS OPEN
JOIN ANY TWO CLASSES SPOKEN HINDI FREE
SCHOOL TUITIONS UPTO +2
ALL BOARDS / ALL SUBJECTS
NEET/JEE/NATA/LAW/CA/CMA/CS & All
B.E/B.TECH/DIP/MBA/UG/PG & All
SPOKEN ENGLISH • HINDI • TAMIL • TELUGU • FRENCH • GERMAN • ARABIC • DUTCH • MALAY • CHINESE & ALL LANGUAGES
SPECIAL COACHING FOR SLOW LEARNERS
HOME & REGULAR CLASSES
78248 35095 / 85

MASTER THE ART OF
• DRAWING
• OIL PASTLE
• WATER COLOUR
• GLASS PAINTING
• FABRIC COLOUR
ONLY FOR LADIES & CHILDREN.
99621 53403

## TUITION

2 DAYS WORKSHOPS ON
• BOTTLE ART
• BLOCK PRINTING
• BAG DESIGNING
• GLASS PAINTING
89396 02761

## GENERAL

### NOTICE

நான், கீதா பி,
D/O (late) V.M ஷெட்டி.

1/270 முகப்பேர் [illegible] சென்னை 37 இல் வசிக்கும் சுமார் 48 வயது.

4 ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் எங்கள் குடியிருப்பை புதுப்பிக்கும் போது அசல் சொத்து ஆவணங்களை [illegible] / [illegible] விட்டோம் என்பதை இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவிக்கிறேன்.

12/09/1994 தேதியிட்ட 1994 இன் ஆவண எண் 5499 இன் [illegible] பத்திரம் மற்றும் 14/09/1994 தேதியிட்ட 1994 இன் ஆவண எண் 5545 மூலம் விற்பனை பத்திரம் [illegible] பத்திர பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

அந்த ஆவணத்தை யாராவது கண்டு பிடித்தால், 95512 81399 என்ற எண்ணில் அல்லது மேலே உள்ள முகவரியில் என்னை தொடர்பு கொள்ளவும்.

HOUSING LOAN
WITHOUT INCOME PROOF
WITHOUT BUILDING PLAN
CIBIL
99629 22969

This SPACE Cost
250/- Only

VIRO TV Screen Protector
SAVE YOUR TV SCREEN GUARD FROM DAMAGE
HD Clarity | Shockproof | Anti-Scratch | Easy Install
Available Size :
22" 32" 40" 42"
43" 50" 55" 58"
60" 65" 70" 75"



3D LED TV  OLED TV 4K  SMART TV
Anti - Glare & Crystal Clear
GST NO : 33ASKPD6184A2Z2
VIRO ENTERPRISES
9941132600 / 9941132601
virotvscreen@gmail.com



# எங்கேயோ கேட்ட குரல்! 2

யாரையும் பழிவாங்க நினைக்க வேண்டாம்! அழுகிய பழங்கள் தானாக விழுவது போல, மரத்தின் இலைகள் உதிர்வது போல, காலம் மாறும்போது கவலைகளும் கரைந்து போகும்.

ரகசியத்தை வெளிப்படுத்தியவருக்கும், தன் துக்கத்தை வெளிப்படுத்தாதவருக்கும் மனதில் எப்போதுமே நிம்மதி இருக்காது.

உங்கள் அமைதி எதிரிக்கு குழப்பம்!! உங்கள் பயம் எதிரிக்கு தைரியம்! எதுவாக இருந்தாலும் பயத்தை அகற்றுங்கள்! அமைதியாக யோசியுங்கள்; பயம் நீங்கிப் பல வழிகள் புலப்படும்.

எங்கும், எதிலும் குறை காண்பவரின் விருப்பத்திற்கு ஏற்ப நீங்கள் ஒருபோதும் மாற முயற்சிக்காதீர்கள். அவர்களை திருப்திபடுத்தும் முயற்சியில் கடவுளே கூட ஜெயித்ததில்லை.

உங்களது வாழ்வை மிகவும் சிறந்ததாக மாற்றும் நபரை தெரிந்து கொள்ள வேண்டுமா..? முகம் பார்க்கும் கண்ணாடியை உற்றுப் பாருங்கள்! அவர் தென்படுவார்.

BUSINESS TIMES
Editor - SP. Annamalai
Designer - M.Suresh
Office Team:
RAMA LAKSHMI
SANGEETHA
DEVI PRIYA
For Doubts / Queries
98409 96745
businesstimesayana@gmail.com
businesstimes
Kavin Media Works
3PC-57, Above Shanghai Dhaba, Mogappair.
044 4353 7852



# EMPOWERING YOUNG LEADERS

Velammal Vidyalaya, Mel Ayanambakkam, held its Investiture Ceremony, appointing newly elected student council and sports council members for the academic year 2024-25. Dr. S.D. Vaishnavi, Director of Shankar IAS Academy, graced the occasion as Chief Guest, alongside Guests of Honour Master Syed Aarfin Yusuf, All India NEET Topper, and school toppers Master Sarvesh and Master Roshit Mathew. It was a momentous occasion that celebrated the spirit of leadership and set the tone for a successful and productive academic year ahead.

# CHESS TITLE



Sharvaanica A.S, a student of Velammal Vidyalaya, Mel Ayanambakkam, has become Asia's youngest Woman Candidate Master in the under-9 category. With an impressive ELO rating of 1915, Sharvaanica has set a new benchmark in the chess community by earning the prestigious WCM title.

# சத்திய நாராயணா பூஜை



மேற்கு மாம்பலம் கவரை தெருவில் செயல் பட்டு வரும் ஐஸ்வர்யா ஜாதகாலயாவில் 21/07/2024 (ஞாயிற்றுக் கிழமை) அன்று மாலை 4 மணி முதல் சத்திய நாராயணா பூஜை நடைபெறவுள்ளது. இது AISHWARYA JATHAKALAYA யூடியூப் சேனலில் நேரலை மாலை 4 மணி முதல் பௌர்ணமி பூஜை நேரடி ஒளிபரப்பு செய்யப்பட உள்ளது.

இது குறித்த விவரங்களுக்கு, 98841 41870 — 98841 47630.

SAI SMART COLLECTIONS
AADI OFFER
5 TO 30 % DISCOUNT
*Condition apply
T SHIRT START @ Rs.149
BUY 3 SHIRTS @ Rs.999
BRAND SHIRTS & PANTS
5% TO 15% DISCOUNT
1/681, Valayapathi Salai, Mogappair East.
14/8 Welcome Colony, Annanagar West Extn, Ch-101.
98400 53217

SPEED PEST CONTROL
(EXPERT IN ALL PEST CONTROL)
TERMITE CONTROL ●
COCKROACH CONTROL ●
ANT CONTROL ●
& OTHER ●
PEST CONTROL
FREE INSPECTION
MOBILE:
99419 29331

LUNCH BOX
IYENGAR AATHU THALIGAI !!
@ Your Door Step
BREAKFAST - LUNCH - DINNER
No onion no garlic and no masala
Half spice and half salt home made food
Place your orders a day prior to deliver your food on time
For more details pls what's app or call at 98845 33785

FOR JOB LIC
WANTED
NEW APPOINTMENT
RE APPOINTMENT
EARN
Rs.12,500/PER MONTH
CONTACT: 99404 17743

ஐஸ்வர்யா ஜாதகாலயா
AISHWARYA JATHAKALAYA
இங்கு
திருமண தடை அகல, கடன் நிவர்த்தி பெற, காதல் பிரச்சனைக்கு தீர்வுக்காண, கணவன்-மனைவி பிரச்சனையிலிருந்து விடுபட, குழந்தை பாக்கியம் பெற, செய்யும் தொழிலில் மேன்மையடைய, நீதிமன்ற வழக்குகள் முடிவு பெற, அரசியல் மற்றும் கலைத்துறையினர் மேன்மையடைய, குடியை நிறுத்த, வெளிநாட்டு பயணம் தடை நீங்க, நஷ்டங்களை தவிர்க்க, அனைத்து தோஷங்களுக்கு ஜோதிடம் மூலம் பரிகாரங்கள், சகலமும் கைகூட மற்றும் நம் வாழ்கையில் ஏற்படக் கூடிய பல பிரச்சனைகளையும் எளிதில் தெரிந்துகொள்ளலாம், அதற்கு தீர்வும் காணலாம்.
ஜாதகம் கணித்து பலன் பார்க்கப்படும்
அடிப்படை ஜாதகம், பலன் | முழுநீள ஜாதகம், பலன் | பிறந்தநாள் வருடப்பலன் | திருமண பொருத்தம் | முகூர்த்த தேதி மற்றும் நேரம் | திருமண தாமதம் | புத்திர பாக்கிய தாமதம் | கல்வி ஆலோசனை | உத்யோகம் மற்றும் தொழில் முடக்கம் | கடன் தொல்லை | வியாதி அவஸ்தை | குண ரோக தோஷங்கள் | விருமனை யோகம் | அதிர்ஷ்டப் பெயர் சூட்டுதல் | அதிர்ஷ்டம் தரும் கற்கள் | எண் கணிதப் பலன்
தொலை தூரத்தில் இருக்கும் அன்பர்கள், உலகில் எங்கு இருந்தாலும் ஆன்லைன் மூலமாக தொடர்பு கொண்டு ஆலோசனை பெற்று, தீர்வும் காணலாம்
We Provide Astrological Services "Anywhere in the World" You Can Contact:
TAMIL, ENGLISH, HINDI, TELUGU, KANNADA, MALAYALAM AND MORE LANGUAGES
உங்கள் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண இன்றே சந்திப்பீர்
கே.எஸ்.ரவீந்திரன், வேத சாஸ்திர ஜோதிடர்
98841 41870 | 98841 47630
55, கவரை தெரு (A.M.R கல்யாண மண்டபம் அருகில்), மேற்கு மாம்பலம், சென்னை-600 033
Mail ID: raviarchakar@gmail.com | Web Site: www.aishwaryajathakalaya.com
Our Youtube Channel: aishwaryajathakalaya

# "ம்ஹூம்...கேக்கல, இன்னும் சத்தமா..."

மனைவிக்கு திடீர் சந்தேகம் வந்தது. தன் கணவனுக்குக் காது கேட்கவில்லையோ என்று? ஆனால்... இதை கணவனிடம் நேரடியாக கேட்க அவருக்கு தயக்கம். இந்த விஷயத்தை அவரின் உறவுக்கார டாக்டருக்கு தெளிவாக விளக்கி ஒரு கடிதம் எழுதினார்.

டாக்டரிடம் இருந்து வந்த பதிலில், "இருபது அடி தூரத்தில் இருந்து கணவரிடம் ஏதாவது பேசிப் பாருங்கள்,... கணவரின் காதில் விழவில்லை எனில்... சற்று நெருங்கி பதினைந்து அடி தூரத்தில் இருந்துப் பேசுங்கள். பின் பத்து, ஐந்து இப்படி குறைத்துக் கொண்டே நெருங்கிச் சென்று பேசுங்கள். எத்தனை அடி தூரத்தில் இருந்து பேசினால கணவருக்குக் காது கேட்கவில்லை எனத் தெரிந்தால் அதற்கேற்றபடி சிகிச்சை அளிக்கலாம்" என்றிருந்தது.

அதைக் கேட்டவுடன் மனைவிக்கு ஒரே குஷி. அடுத்தநாள் வீட்டு வாசலில் இருந்தபடியே உள்ளிருந்த கணவரிடம்... "இன்று மகனுக்கு பள்ளி கட்டணம் கட்டியாச்சா?" என்று கேட்டாள். பதில் எதுவும் இல்லை... பின் வீட்டு வரவேற்பறையில் இருந்து அதே கேள்வியைக் கேட்டாள். அதற்கும் பதில் இல்லை, ஹாலில் இருந்து கேட்டாள், சமையலறை வாசலில் இருந்தும் மீண்டும் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டாள்... கணவரிடமிருந்து பதிலே இல்லை.

போச்சு... இரண்டு ஸ்பீக்கரும் அவுட் ஆகிவிட்டது போல என்று மனதில் கன்ஃபார்ம் செய்து விட்டார். கடைசி வாய்ப்பாக கணவனின் காது அருகே சென்றுச் சத்தமாக... "இன்னைக்கு பையனுக்கு fees கட்டியாச்சா?" என்று கேட்டாள்.



காதில ஏதோ குண்டு வெடித்தது போல் இருக்கவே... அவளின் கணவன் அவளை கோபமாக திரும்பிப் பார்த்து... "ஏன்டி இப்படி கத்துற?, நீ வாசல் கேட்டிலிருந்து... வரவேற்பறையில் இருந்து, ஹாலில் இருந்து, சமையலறை வாசலில் இருந்து கேட்க, கேட்க நானும் கட்டியாச்சு கட்டியாச்சுனு சொல்லிக்கிட்டே இருக்கேன். அது உன் காதில் விழவில்லையா? காதுல என்ன பஞ்சு மூட்டையா வைச்சிருக்க...?" என பொரிந்துத் தள்ளிவிட்டான்.

மனைவி அதிர்ச்சியில் உறைந்துபோய் நின்றாள். தவறு தன்னிடம் தானா? இப்படித்தான் பலர் பிரச்சனையை நம்மிடம் வைத்துக் கொண்டு, அதை பிறரிடம் இருப்பதாக நினைத்து வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். என்ன விசித்திரம்!!!



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப் பெருந்தகை குறித்து அவதூறாக பேசிய பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலையை கண்டித்து, அடையாறு அம்பேத்கர் மணிமண்டபம் அருகில் 92வது வார்டு உறுப்பினர் கே.வி. திலகர் தலைமையில் ஏராளமான காங்கிரஸ் பொறுப்பாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



## CELEBRATING EXCELLENCE

Velammal Vidyalaya Paruthipattu, Primary Compartment applauds the young talented Aaradhya Rupesh and Adithya SS of grade 3 who has made waves by winning Zonal Gold Medal In Imo And International Medal IN IMO in the prestigious Science Olympiad Foundation (SOF) competition. This outstanding achievement demonstrates their dedication towards academic excellence and passion for learning.

SKS
S.K.S TAX CONSULTANT
S. KANNIAH M.A., D. COM., CMA
Mobile No. : 92823 25119
Phone No. : 044 4206 6702
INCOME TAX RETURNS E-FILING OF RETURNS
(Accounting & Auditing)
(Financial Year 2023-2024) (Assessment Year 2024-2025)
RUSH with Early Filing of Income Tax Return
FILE YOUR ITR BEFORE 31ST JULY 2024 TO AVOID PENALTY
E-Verify your Return for SPEEDY processing for
(Salaried and Business Entity, Corporate – Partnership – Trusts)
- Accounts Finalisation in TALLY ERP 9
- PF, ESI, Professional Tax & Gratuity & pension
- TDS AND TCS Management
- TALLY ERP 9 with GST
- Cost Accounting / Job Costing
- Auditing and Accounting Service
- Income Tax Return Filing for salary People & Business
- PAN Card
- Payroll Management
- Salary Details-Earning, Deductions, Employee Statutory contributions Employer Contribution with Administration charges
- Shop & Establishment Act
- Digital Signature
NO.87, ARCOT ROAD, KARAMBAKKAM, PORUR, CHENNAI – 600116
Mail ID : kanniahsethu144@gmail.com I www.skstaxconsultants.com

# அழகின் மொத்தம் நீயா..?

## ஆச்சரியப்பட வைக்கும் கட்டணத்தில் ஸ்ரீ லலிதாம்பிகை மருத்துவமனை சிகிச்சைகள்



"இந்தப் பொண்ணு ரொம்ப அழகா இருக்கா... ப்ரபோஸ் பண்ணலாமா..? என்று விளம்பர ஹீரோ ரொமான்ட்டிக் லுக் விடும்போதே, 'மம்மி' என்று அவளைத் தாவிக் கட்டிக் கொள்ளும் ஒரு குழந்தை. அப்படி ஒரு இளமைப் பொலிவு எல்லோருக்கும் கிடைக்குமா..?

கண்ணுக்கு மை அழகு... கவிதைக்குப் பொய் அழகு... என்ற எல்லாமே இட்டு நிரப்பக்கூடிய நிலையில்தான் இருக்கிறது இன்றைய நிலை. இயற்கையாகவே நமக்கு அழகு இருந்தாலும், சில பல நகாசு வேலைகள் அதை மேலும் மெருகாக்கி, அழகுக்கு அழகு சேர்க்கிறது. அதற்கு, மருத்துவத் துறையும் பங்களிக்கிறது.

அழகாக இருக்க இருக்க யாருக்குத் தான் ஆசை இருக்காது? சருமப் பொலிவு, ஆப்பிள் கன்னங்கள், அழகான உதடு என்று தேவைக்கேற்ப மருத்துவ சிகிச்சை கிடைக்கிறது. ஆறு மாதங்களுக்கு அழகை அள்ளித் தரும் வல்லமை பெற்ற மருந்துகள், இருமனக் கனவோடு இருக்கும் பலருக்கு அழகான செய்தி.

"இது இளமையில் இருப்பவர்களை விட, 35 வயதைக் கடந்தோருக்கு பெரும் வரமாக இருக்கிறது. வயதைக் குறைத்துக் காட்டுவதற்கு இது பயன்படுகிறது..." என்கிறார் ஸ்ரீ லலிதாம்பிகை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சருமப் பராமரிப்பு சிகிச்சைப் பிரிவின் தலைவர் H.அம்பிகா. இந்தியாவிலும், வெளிநாட்டிலும் இருக்கும் தோல் பராமரிப்பு சிகிச்சை முறைகளில் மிகுந்த அனுபவம் பெற்றவரான அம்பிகா, அதிநவீன நடைமுறைகளை லலிதாம்பிகை மருத்துவமனையில் அமல்படுத்தி வருகிறார்.

"வயது ஏற, ஏற முகத்தில் சுருக்கங்கள் வருவது இயல்பு. அதிக உணர்வுகளைக் காட்டுவோருக்கு இது விரைவிலேயே வந்துவிடும். இந்த தற்காலிக சுருக்கங்களைக் குறைத்து, முகத்தில் பொலிவை ஏற்படுத்த போட்டாக்ஸ் என்ற மருந்து பயன்படுகிறது. இதற்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டும் என்பதெல்லாம் இல்லை. ஜஸ்ட், 30 நிமிடங்கள் ஒதுக்கினாலே போதும். முகத் தசைகளில் திறமையான மருத்துவர்களின் உதவியோடு இந்த மருந்தை உட்செலுத்திக் கொள்ளலாம். இதை செலுத்தும் அளவு நபருக்கு நபர் மாறுபடும். எனவே, அனுபவம் மிக்கவர்களிடம் இதை எடுத்துக் கொள்வது சிறந்த பலனைத் தரும். மூன்று முதல் நான்கு நாட்களில் இதன் பலன் தெரிய ஆரம்பிக்கும். விரைவானது... வலியற்றது... பொதுவாக பாதுகாப்பானது. இந்த சிகிச்சை வழங்கும் முன் குறிப்பிட்ட நபரிடம் நாங்கள் விரிவான கவுன்சிலிங் கொடுப்போம். செய்ய வேண்டியது, செய்யக் கூடாதது என்று சில விஷயங்களை விளக்குவோம். அதன் பின்னரே சிகிச்சை தொடங்கும். இது ஆறு மாதம் முதல் ஒன்பது மாதங்கள் வரை சிறப்பான பலன்களைத் தரும். பின்னர் மீண்டும் தேவைப்பட்டால், இதைத் தொடர்ந்து கொள்ளலாம்..." என்றவர் தொடர்ந்தார்.




அதிகம் வெயிலில் அலையும் பணியில் இருப்போருக்கு விரைவிலேயே முகம் பொலிவை இழக்கும் அபாயம் உண்டு. இதேபோன்று, அதிக மேக்கப் போடுவோர், சினிமா, சின்னத் திரையில் இருப்போர், மாடலிங் துறையினர் ஆகியோருக்கும் இளம் வயதிலேயே முகப் பொலிவுக்கான தேவை ஏற்படும். அவர்களுக்கு நாங்கள் இந்த சிகிச்சையை அளித்திருக்கிறோம். இதில் ஆண், பெண் பாகுபாடு இல்லாமல் இருபாலரும் சம அளவில் வருகிறார்கள்" என்றார் அம்பிகா.

"முகத்தில் எண்ணெய் வழிவது, அல்லது சருமம் வறண்டு இருப்பது, அதிக வியர்வை வெளியேறுவதால் அவதி, உள்ளங்கை வியர்வையால் எந்தப் பணியும் செய்ய முடியாமல் சிரமப்படுவது என்று பல்வேறு பிரச்னைகளுக்கும் ஸ்ரீ லலிதாம்பிகை மருத்துவமனையில் தீர்வு கிடைக்கிறது. வெளியில் ரூ.20,000 ஆகும் சிகிச்சைக்கு இங்கே பாதி அளவு மட்டுமே செலவாகும். அதுவும் மருந்துக்கான செலவு மட்டுமே. மருத்துவர் கட்டணம் முற்றிலும் கிடையாது. அல்லது மிக மிகக் குறைவு என்பது இந்த சிகிச்சை முறையின் முக்கிய அம்சம்.





ஸ்ரீ லலிதாம்பிகை மருத்துவமனையில் உயர்தர மருத்துவக் கருவிகளும் வளர்ந்த நாடுகளுக்கு நிகரான மருத்துவ அனுபவம் கொண்டோரும் என பத்துக்கு மேற்பட்ட டாக்டர்கள் எங்கள் குழுவில் இருக்கிறார்கள். எங்கள் குழுமத் தலைவர் திரு.ஏ.சி.எஸ் அவர்களின் ஆலோசனைப்படி, எளிய மக்களும் பயனடையும் வகையில் சிறந்த மருத்துவத்தை, சிறிய கட்டணத்தில் அளிக்கிறோம். நமது சுற்றுப்புற மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதில் தரமான சேவை செய்துவரும் இம் மருத்துவமனை, நம்பகமான சூழலை உருவாக்கி பலரது வாழ்வில் ஒளியேற்றி உள்ளது. அனைவரும் இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எங்களின் ஆர்வம்" என்கிறார்.

"அழகின் மொத்தம் நீயா..?" என்று ஊரை வியக்க வைக்க நீங்க ரெடியா..!

தொடர்புக்கு: 9790 777 364

இந்த சிகிச்சைக்கு வெளியில் ஆகும் செலவைவிட பாதிக்கும் குறைவாகவே ஆகும். அதுவும் மருந்துக்கான செலவாகவே இருக்கும். மருத்துவர் கட்டணம் என்பது கிடையவே கிடையாது.



Dr.H.அம்பிகா தனது மருத்துவக் குழுவினருடன்...

**HDFC Life Guaranteed Wealth Plus**
A Non-Linked, Non-Participating Individual Life Insurance Savings Plan

**Secure Your Future with Tax-Free Investments !!**

Investment Benefits:
- Earn 7% Returns annually
- 80C Income Tax Benefits for your investment
- Life Insurance Cover for added security

Invest
Rs.1 Lakh per year for 12 years (Rs.12,00,000)



Get
Rs.1,32,550 every year from 14th to 43rd year (Rs.39,76,500) +
Return on Premium Rs.12 lakhs with Last Payout Total Rs.51,76,500

For More Details: Ramya Meyappan, Life Insurance Advisor,
73583 83323, 98409 96745

செம LOCATION! செம PRICE!




1BHK - 632-788 sq.ft., 2BHK - 1021-1258 sq.ft., 3BHK - 1238-1679 sq.ft.
Premium Smart Apartments
5000 sq.ft. Clubhouse |
9000 sq.ft. Podium Landscape at 1st Floor |
10208 sq.ft. OSR with Landscaping





FOR MORE DETAILS: 78458 36745

Owned, Printed and Published by SP. ANNAMALAI, Office : 3/PC - 17, Above Shanghai Dhaba, Mogappair West, Chennai - 37. Cell: 98409 96745. Editor: SP. ANNAMALAI.
Printed at Meera Offset Printers, No. 104, V.R. Pillai Street, Triplicane, Chennai 600 005.